**தலைப்பு 228- நீதிமன்ற நிருவாகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீதிமன்ற நிருவாகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நீதிமன்ற நிருவாகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் நீதிமன்ற நிருவாகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 20 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்ற நிருவாகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளும் சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன எனவும்,

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் காணப்பட்ட ரூபா 200,405,660 மற்றும் ரூபா 26,841,142 தொகையான இரண்டு மீதிகள் மீளாய்வாண்டின் போது தீர்த்து வைக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான தகவல்கள் மீளாய்வாண்டிற்கான கட்டுநிதிக் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது தீர்த்துவைக்கப்பட்ட இக்கட்டு நிதி மீதிகளைத் தவறுதலாக நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ACA 03 படிவத்தில் உள்ளடக்க முடியாதிருந்தது. | உபகட்டு நிதி மீதிகளைத் தீர்த்து வைத்தல் தொடர்பான தகவல்கள் மீளாய் வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

**1.6.2 நிதி நிலைமைக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றின் இறுதி மீதிகளை மீளாய்வாண்டிற்கான மீதிகளாக உள்ளடக்கும் போது ரூபா 950,444,894 தொகையான வித்தியாசம் காணப்பட்டது. | இந்த வித்தியாசத்திற்கான காரணமாக இருந்ததானது மீளாய்வாண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதிகளை ஆரம்ப மீதியாக உள்ளடக்குவதும், தலைமை அலுவலகத்தினால் கொள்வனவு செய்து ஏனைய நீதிமன்றங்களுக்கு வழங்கப்படுகின்ற சொத்துக்கள் தலைமை அலுவலகத்தின் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து நீக்கி உரிய உச்ச நீதிமன்றத்தின் ஆரம்ப மீதியாக சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டது. | முன்னைய ஆண்டிற்கான சொத்துக்களின் இறுதி மீதிகளானது ஆரம்ப மீதிகளுடன் கணக்கிணக்கம் செய்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நடைமுறை வேலைகளின் மீதி ரூபா 6,399,989,032 ஆக இருந்த போதிலும் நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் அப்பெறுமதி ரூபா 6,396,228,605 ஆக இருந்ததனால் ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதியும் ஆதனங்கள், பொறி, உபகரணங்கள் என்பவற்றின் ஒதுக்கமும் ரூபா 3,760,427 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | வாகரை நீதிமன்றத்தினை நிர்மாணிப்பது தொடர்பாகச் செலுத்தப்பட்ட அப் பெறுமதியை CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் சொத்துக்களின் பெறுமதியுடன் சேர்த்துக் கொள்ளும் போது இடம்பெற்ற முறைமைத் தவறின் காரணமாக அது திறைசேரிக் குறிப்புக்களில் சேர்த்துக் கொள்ளாமையின் அடிப்படையில் இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளதுடன் அதனை சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா 1,190,923,305 ஆக இருந்த போதிலும் நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் அப்பெறுமதி ரூபா 1,167,226,396 ஆக இருந்ததனால் ஆதனங்கள், பொறிகள், மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம் ரூபா 23,696,909 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சொத்துக்களின் பெறுமதியை CIGAS Interface இல் உட்படுத்தும் போது இந்த வித்தியாசம் இடம்பெற்றுள்ளதுடன் அரசாங்க கணக்குகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு இந்த வித்தியாசத்தை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திணைக்கள ஏடுகளை திறைசேரி கணக்குகளுடன் ஒப்பீடு செய்து சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 1.6.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் தனித்தனி கடன் மீதிகளை வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்த தொகைக்கும் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்குமிடையே ரூபா 12,536,427 வித்தியாசம் காணப்பட்டது. | அரசாங்க உத்தியோகத்தர்களது முற்பணங்கள் கணக்கின் தனித்தனி மீதிகளை வகைப்படுத்தல் பொழிப்புக்கும் கட்டுப்பாட்டு கணக்கிற்குமிடையே காணப்படுகின்ற இந்த இணக்கமின்மையானது 90 ஆவது தசாப்தத்திலிருந்து காணப்பட்டு வருபவையாகும். உச்சநீதிமன்ற வலயங்களுக்கிடையே உள்ளக இடமாற்றத்தின் கீழ் கடன் மீதிகளைத் தீர்த்து வைக்கும் போது இத்தவறு ஏற்பட்டுள்ளதுடன் அதனைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்து அமைச்சிற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வலய கணக்காளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததுடன் செயல் முன்னேற்றம் அடிக்கடி பரீட்சிக்கப்பட்டது. | தனித்தனி மீதிகளின் வகைபடுத்தல் பொழிப்பின் மொத்த தொகையானது திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்கு சமமாக இருத்தல் வேண்டும் |

### 1.6.4 ஏனைய முற்பணக் கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| முன்னைய ஆண்டிற்கான வாடகை மற்றும் வேலை முற்பணங்கள் கணக்கில் உள்ளடக்கப்பட்ட 03 நிர்மாணச் செயற்திட்டங்களின் 2020 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு அறவீடு செய்ய வேண்டிய ரூபா 4,240,412 தொகையான முற்பணங்கள் மீளாய்வாண்டின் போது அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தும் அந்த அறவீடுகள் மற்றும் 04 நிர்மாணச் செயற்திட்டங்கள் தொடர்பாக 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவீடு செய்யப்பட வேண்டிய ரூபா 17,689,394 தொகையான வாடகை முற்பணங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையிலிருந்து இது சம்பந்தமாக விசாரணை செய்ததன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட அனைத்து செயற்திட்டங்களின் முற்பணங்களும் ரா.கி.வ 250/2016(1) ஆம் இலக்கத்தின் 3 மற்றும் 4 ஆம் பந்திகளின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. கணக்காய்வு ஐயவினாவுக்கு முன்னர் இச்செயற்திட்டத்திற்காக முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்ததனாலும் வேலை ஆரம்பிக்கும் முற்பணங்களுக்காக ஒதுக்க கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காத தனாலும் இந்த அறவீடுகள் மற்றும் அறவிட வேண்டியவைகளின் மீதி தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. | 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 250/2016(1) ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் முற்பணங்கள் தொடர்பான சரியான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 05 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 41,420,000 தொகையான மேலதிக நிதி | கொவிட் தொற்று நோயின் காரணமாக ஆண்டின் இறுதியில் நீதிமன்றத்தின் செயற்பாடுகள் முறைப்படியாக | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட |

| | | |
|---|---|---|
| ஏற்பாட்டிலிருந்து ரூபா 24,379,798 தொகை பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இடம்பெறாமையின் காரணமாக எதிர்பார்த்தவாறு செலவுகள் இடம்பெறாமையின் காரணமாக 04 செலவு விடயங்களின் நிதி ஏற்பாடுகளும் ஆண்டின் இறுதியில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட திகதியில் வீட்டுத் தளபாடங்களைப் பெற்றுக்கொள்ள முடியாமையின் காரணமாக ஒரு செலவு விடயத்தின் நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | வேண்டியதுடன் திட்டத்திற்கு இணங்க மேலதிக நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 756,032 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | அரசாங்க தொழிற்சாலைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 756,032 தொகை நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது தவறுதலாக விடுபட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 04 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் பயன்படுத்தியதைக் கழித்ததன் பின்னர் சேமிப்பினை மிகைத்து ரூபா 10,412,631 தொகையான பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கொவிட் இன்னலின் காரணமாக நாடு திறக்கப்பட்டதோடு வார இறுதி மற்றும் விடுமுறை தினங்களில் சேவையாற்ற வேண்டி ஏற்பட்டமையும், ஆண்டின் இறுதியில் கணக்குகளைத் தீர்த்து வைக்கும் நடவடிக்கையின் காரணமாகவும், உத்தியோகத்தர்கள் மேலதிக நேர வேலையில் ஈடுபட வேண்டி ஏற்பட்டமையும் வழக்கு நடவடிக்கைகளை துரிதப்படுத்தியதன் காரணமாகவும், | நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பிடியாணைகளைப் பகிர்பவர்களின் போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்தமை, போட்டோ பிரதி இயந்திரம், பெக்ஸ் இயந்திரம் என்பவற்றை பழுதுபார்த்தல், கொவிட் இன்னலின் காரணமாக சுகாதாரச் செலவுகள் அதிகரித்தல் என்பவற்றின் காரணமாக 04 செலவு விடயங்களுக்காக பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்கியிருக்காமை

### அவதானிப்புக்கள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 109(1) மற்றும் (2) | 3,093,666 | 02 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகள் வரையான காலத்தில் 63 சந்தர்ப்பங்களின் போது இடம்பெற்ற நட்டங்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | நிகழ்கால வாகன விபத்துக்களை உள்ளடக்கி ஏனைய நட்டங்கள் சம்பந்தமாக நி.பி பிரகாரம் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிட்ட நட்டங்களானது பல ஆண்டுகள் பழமையானதுடன் காணப்படுகின்ற நடைமுறைச் சிக்கலினைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கிணங்க தேவையான முயற்சிகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | நிதிப்பிரமாணம் 109(1) மற்றும் (2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | இணக்க கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 28,746,312 கூட்டு மொத்தமான நிலுவைக் கடன் மீதியில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்த கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 7,633,491 ஆக இருந்ததுடன் அது மொத்த நிலுவைக் கடன் மீதியில் 26 சதவீதமாகும். | 1990 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்படாது காணப்பட்ட கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 7,633,491 சம்பந்தமாக மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்காக கடன் கோவைகள், தனிப்பட்ட கடிதங்கள், தேசிய அடையாள அட்டை இலக்கம் முதலிய தகவல்கள் நீதிமன்றத்திடம் இல்லாததனால் அக்கடன் மீதிகளைப் பதிவழிப் பதற்கும் முடியாதுள்ளது. | நிலுவைக் கடன் மீதிகளை விரைவாக அறவிடுதல் வேண்டும். |
| (ஆ) | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வுபெற்றுச் சென்ற உத்தி யோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 10,313,832 தொகையானது ஒரு கடன் மீதியாகும். இதில் ரூபா 145,820 தொகையான கடன் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டது. | ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 10,313,832 தொகையான கடன் மீதியில் ரூபா 1,170,900 தொகையானது 2021-03-31 ஆந் திகதியில் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதுடன் மிகுதிக் கடன் மீதிகளையும் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஓய்வுபெற்ற அல்லது மரணமடைந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை ஓய்வூதியத் திணைக்களம் அவர்களது கணக்குகள் பொழிப்பிலிருந்து தீர்த்து வைக்குமாறு ஆலோசனை வழங்கியிருந்தும் நீதிமன்ற நிருவாகத் தலைப்பு தொடர்பாக அந்த புதிய முறைமையின் கீழ் இதுவரை ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தீர்த்து | அறவிடப்படாத கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வைக்கப்படவில்லை. இந்நடவடிக்கைகளில் ஏதாவது தடைகள் ஏற்படுமாகவிருந்தால் முன்னையவாறு மாதாந்த கணக்குப் பொழிப்புக்களினூடாக கடன் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் பின்னர் தெரியப்படுத்தப் பட்டிருந்தது. | |
| (இ) தாபனக் விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 7.2.5 ஆம் பிரிவிற்கு முரணாக ஏற்கனவே பெற்றுக் கொண்ட மோட்டார் சைக்கிள் கடனை முழுமையாக அறவீடு செய்யாது கொழும்பு உச்ச நீதிமன்ற வலயத்தின் உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் வாகன கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் பின்னர் அவரின் வேலை இடைநிறுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக பெற்றுக் கொண்ட மோட்டார் வாகன கடன் ரூபா 107,000 தொகையும் சைக்கிள் கடன் ரூபா 3,800 தொகையும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவீடு செய்யப்படாது காணப்பட்டன. | இது சம்பந்தமாக கொழும்பு உச்ச நீதிமன்றத்திடம் விசாரிக்கப்பட்டதுடன் கோவைகளைப் பரீட்சித்த போது அந்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக எதுவித தகவலையும் கண்டுபிடிக்க முடியாததனால் மேலும் இது சம்பந்தமாக தேடிப்பார்த்து மேலதிக நடவடிக்கை எடுப்பதாக 2021-04-09 ஆந் திகதிய கொ/உச்சநீதி/க/முற்பணம் பீ/2021 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டது. | முற்பணங்களைச் செலுத்தும் போது தாபன விதிக் கோவையின் பிரகாரம் அறவிடப்படாத கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.5 வைப்பு மீதிகள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|
| 26 நீதிமன்ற வலயங்களின் 593 வைப்புக் கணக்குகளின் ரூபா 10,090,396,580 தொகையான மீதி மற்றும் தொழில் நீதிமன்றங்களின் | நீதிமன்ற வலயம் தொடர்பாக அதிக அளவான வைப்புக்கள் காணப்படுவதனால் | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| 04 வைப்புக் கணக்குகளின் ரூபா 1,821,214 தொகையான மீதி சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலப்பகுப்பாய்வினைச் சமர்ப்பித்தல் நடைமுறையில் சிக்கலானதாக உள்ளதுடன் தலைமை அலுவலகத்திற்காக மாத்திரம் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |

## 2.6 வங்கி கணக்கு செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு தலைமை அலுவலகம் மற்றும் உச்சநீதிமன்றத்தின் 23 வலயங்களுக்குரிய 48 வங்கி கணக்குகளின் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை மிகைத்த ரூபா 2,813,441 பெறுமதியான காசோலைகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 396(இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஐயவினாவினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள நீதிமன்ற வலயத்தில் 06 மாதங்களை மிகைத்த காசோலைகள் சம்பந்தமாக 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு உரிய நீதிமன்றங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 396(இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 ஆரம்பிக்கப்படாத செயற்திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) கந்தளை நீதிமன்றக் கட்டிடத் தொகுதியினை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 5,000,000 நிதி ஏற்பாடானது ஒப்பந்தக்காரர் ஒருவர் தெரிவு செய்யப்படாமையின் காரணமாக செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது நாட்டில் உருவாகிய கொரோனா இன்னல்களின் காரணமாக இச்செயற்திட்டத்தினை ஆரம்பிப்பது தொடர்பான பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் தற்பொழுது இச்செயற்திட்டம் தொடர்பான பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இந்த ஆண்டில் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | திட்டங்களின் பிரகாரம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் வேண்டும். |

## 3.2 காலதாமதத்தின் பின்னர் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| பூகொட மாவட்ட நீதவான் நீதிமன்ற புதிய கட்டிடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2019 சனவரி மத்தியில் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்தது. எனினும், செயற்திட்டத்தின் தொடக்க செலவு மதிப்பீடு ரூபா 449,730,984 தொகைக்கு 2019 பெப்ரவரி 25 ஆந் திகதி மீண்டும் தயாரித்தல், கட்டிட நிர்மாண திட்டத்தை 2019 ஏப்ரல் 05 ஆந் திகதி மீண்டும் அங்கீகரித்தல் என்பவற்றின் காரணமாக 09 மாதங்கள் தாமதமடைந்து 2019 செப்தெம்பர் 22 ஆந் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ள ரூபா 450 மில்லியன் மதிப்பீட்டு பணத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருக்காத புதிய தொழில்நுட்ப துணைக் கருவிகளை உள்ளடக்கி ரூபா 610 மில்லியன் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 2018 திசெம்பர் 28 ஆந் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. பின்னர் புதிய தொழில்நுட்ப துணைக்கருவிகள் நீக்கப்பட்டு சிவில் நிர்மாணத்திற்காக மாத்திரம் ரூபா 429 மில்லியனுக்கு தொடக்க செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு முன்னைய ஒப்பந்தம் வழங்கிய கடிதத்தின் பெறுமதி திருத்தப்பட்டு 2019 யூலை 26 ஆந் திகதி நிறுவனத்திற்குத் தெரியப்படுத்தப்பட்டது. | சரியாக மதிப்பீட்டினைத் தயாரித்து காலதாமதமின்றி செயற்திட்டம் அமுல்படுத்தப் படுதல் வேண்டும். |

## 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் பூகொடை மாவட்ட / நீதவான் நீதிமன்றங்களைச் செயற்படுத்துவதற்காக ரூபா 400,000 மாதாந்த வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட தற்காலிக கட்டிடமானது உரிய செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படாது ரூபா 6,400,000 | பூகொடை மாவட்ட / நீதவான் நீதிமன்றங்களைச் செயற்படுத்துவதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட தற்காலிக கட்டிடத்தை அந்த வகையிலேயே ஒரு நீதிமன்றத்திற்காக ஈடுபடுத்த முடியாததனால் நீதிமன்றத்தை | சிக்கனமாக செலவுகளை முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொகை குத்தகை வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. புதிய நீதிமன்ற கட்டிடத் தொகுதியின் நிர்மாணத்தை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் மேற்கொள்ளாமையின் காரணமாக இதன் குத்தகை காலம் 2021 சனவரி 31 இலிருந்து 2022 யூலை 20 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. | செயற்படுத்துவதற்காக பொருத்தமான வகையில் தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டியிருந்ததுடன் கட்டிடத்தை வாடகைக்கு பெற்றுக் கொண்டதன் பின்னரே அந்த மாற்றங்களைச் செய்யக் கூடியதாக இருக்கும். நீதிமன்றத்திற்குப் பொருந்தும் வகையில் கட்டிடத்தினை மாற்றம் செய்வதற்கு காலம் எடுத்துள்ளதுடன் அக்காலத்திற்காக குத்தகை வாடகை செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது. | |

**4. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் செலவுத் தலைப்பு 228 இற்குரிய (நீதிமன்ற நிருவாகம்) நீதி அமைச்சின் மூலம் நியமிக்கப்பட்ட 09 பதவிகள் தொடர்பான வெற்றிடங்களின் எண்ணிக்கை 522 ஆக இருந்ததுடன் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற 08 பதவிகளுக்குரிய வெற்றிடங்கள் 874 ஆகும். | நீதி அமைச்சின் மூலம் நியமனங்கள் மேற்கொள்ளப்படுகின்ற பதவிகளுக்குரிய இலங்கை கணக்காளர் சேவை, மொழி பெயர்ப்புச் சேவை, அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை என்பவற்றின் பதவிகளிலுள்ள வெற்றிடங்கள் தொடர்பாக அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்குத் தெரியப் படுத்தப்பட்டள்ளதுடன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் புதிய நியமனங்களின் மூலம் நீதிமன்றங்களில் காணப்படுகின்ற 06 வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆரம்ப மட்டத்திலுள்ள பதவிகளுக்காக பலநோக்கு அபிவிருத்தி செயலாற்றல் படையணித் திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன் 132 அலுவலக உதவியாளர் பதவிகள் மற்றும் 48 நீதிமன்ற பாதுகாப்பு பதவிகள் என்பவற்றிற்காக அத்திணைக்களத்தின் மூலம் நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | தேவையான பதவிகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |